வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 50/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 07   28.04.2026 செவ்வாய்க்கிழமை   இதழ் : 112   பக்கங்கள் : 08

## அர்ச்சுனா எம்.பி. மறியலில்!

யாழ்ப்பாணம், ஏப். 28

கைத்துப்பாக்கி காட்டி பெண்களை மிரட்டிய குற்றச்சாட்டில், கைது செய்யப்பட்ட பாராளு மன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனை எதிர் வரும் நாளை 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெரியவிளான் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினருக்கும், மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் காணி பிணக்கு ஒன்று நிலவி வரும் நிலை யில், கடந்த சனிக்கிழமை

07

# சட்டத்தின் முன் பிக்குகளும் சமம்!

### போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 28

கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் போதைப்பொருளுடன் சிக்கிய பிக்குகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

07



## செம்மணி மனிதப் புதைகுழியின் 3ஆம் கட்ட அகழ்வு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம், செம்மணி - சித்துப்பாத்தி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள், சுமார் எட்டு மாத கால இடைவெளிக்குப் பின்னர் நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்புதைகுழியில் இதுவரையில் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது, மொத்தம் 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளன.

07

# தையிட்டி விகாரை காணி அளவீட்டு பணியை உடனடியாக நிறுத்துங்கள்!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாவட்ட செயலாளருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 28

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்யும் பணிகளை உடனடியாக நிறுத்தி, குறித்த காணி உரிமையாளர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு அழைத்துக் கலந்துரையாடிய பின்னர், காணி உரிமையாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில், வெளிப்படையான எழுத்து மூலமான இணக்கப்பாடு எட்டப்பட்டு காணி விடுவிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படல்வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யா.மாவட்ட செயலாளரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை இன்று செவ்வாய்க்கிழமை அளவீடு செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த பணிகளை இடைநிறுத்துமாறு கோரி மாவட்ட செயலாளருக்கு, பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

மேற்படி காணிகளை விடுவிக்க வேண்டுமென கடந்த 17 ஆண்டுகளாக காணி உரிமையாளர்கள் கோரி வந்துள்ள நிலையில், கடந்த மூன்று வருடங்களாக வீதியிலிருந்து போராடிவருகின்றார்கள் என்பது தாங்கள் அறிந்ததே.

இக்காணிகளை விடுவிப்பது தொடர்பில் காணி உரித்து நிர்ணய திணைக்களம் ஊடாக அளவீட்டு நடவடிக்கைகள்

07

பருத்தித்துறை நகர சபை விவகாரத்தில்

## ஆளுநரின் விசாரணைகளுக்கு நீதிமன்றம் இடைக்கால தடை!

யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கு மாகாண ஆளுநரால் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினருக்கு எதிராக முன்னெடுக்கப்படவிருந்த விசாரணை நடவடிக்கைகளுக்கு வடக்கு மாகாண மேல் நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் டக்ளஸ் டி போல் மற்றும் நகர சபை உறுப்பினர் சிவலிங்கம் பொன்னம்பலம் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பின்னரே நீதிமன்றம் இந்த அதிரடி உத்தரவை வழங்கியுள்ளது.

07

வில்பத்து வன அழிப்பு விவகாரம்;

## வழக்கு விசாரணையில் இருந்து உயர்நீதிமன்ற நீதியரசர் விலகல்

கொழும்பு, ஏப். 28

வில்பத்து வனப்பகுதியை ஒட்டியுள்ள காடுகளை அழித்து மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றம் தொடர்பான வழக்கில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் விசாரணையிலிருந்து உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் விலகியுள்ளார்.

வில்பத்து வனப்பகுதியை ஒட்டியுள்ள காடுகளை அழித்து மீள்குடியேற்றங்களை மேற்கொண்டமைக்காக, குறித்த பகுதிகளை மீண்டும் வனமாக்கும் செலவை முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஏற்க வேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னதாக தீர்ப்பளித்திருந்தது.

07

## மனைவி, அவரது சகோதரன் மீது கணவன் கத்திக்குத்து தாக்குதல்!

### சாவகச்சேரி பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 28

சாவகச்சேரிப் பகுதியில் கத்திக்குத்துச் சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இதில் அண்ணன் - தங்கை என இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கணவன்-மனைவி இடையே சாவகச்சேரி

03

## அர்ச்சுனா எம்.பி. தாக்கினார் என பெண் யாழ்.வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், ஏப். 28

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் தாக்குதலுக்கு உள்ளான இரு நபர்களில் பெண்ணொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், மற்றைய நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் ஒரு தரப்பினருக்கும் இடையே பெரியவிளான் பகுதியில் இடம்பெற்ற முரண்பாட்டின்

07

## எதிரணி கோரிய பாராளுமன்ற விவாதத்தை நிராகரித்தது அரசு!

கொழும்பு, ஏப். 28

திறைசேரியாவால் வழங்கப்பட்ட 2.5 மில்லியன் டொலர்கள் மூன்றாம் தரப்பினருக்கு மாற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சி கோரிய பாராளுமன்ற விவாதத்தை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, இந்த விவகாரங்கள் குறித்து ஒரு நாள் விவாதம் நடத்த எதிர்க்கட்சி கோரியிருந்தது.

03

## வீதி அபிவிருத்தி அதிகார சபை மூடி மறைப்பதற்கு அரசு முயற்சி!

### நாமல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 28

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் குறைத்து மதிப்பிட முயற்சிப்பதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற

03

## மே தினத்தில் பங்கேற்குமாறு ஐ.தே.கவுக்கு சஜித் அழைப்பு

கொழும்பு, ஏப். 28

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையில், நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அனைத்து மக்களுக்கும் சௌபாக்கியத்தை

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊடகச் சவால்களை நாம் முறியடிப்போம்!

## அமைச்சர் கே.டி. லால் காந்த கூறுகிறார்

கொழும்பு, ஏப். 28

எமக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் ஊடகச் சவால்களை எம்மால் முறியடிக்க முடியும் என விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்தார்.

கண்டி செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்த கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த கால புயல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதிதாக வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக காணிகள் மற்றும் வசதிகளை வழங்குவது தொடர்பாக இந்த கூட்டம் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய அமைச்சர், தமக்கு எதிராக முன்வைக்கப்படும் சவால்கள் குறித்து கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கூறினார்.

சில ஊடக நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடக வலைப்பின்னல்கள் தமக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றன. அத்த



கையை சவால்களை எதிர்கொள்ள எம்மால் முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான விமர்சனங்கள் ஒரு பாரிய சவாலாக இல்லை எனக் கருதுவதாகவும், அதனை வெற்றி கொள்வதற்கு தமக்கும், அரசுக்கும் முழுமையான ஆற்றல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## பிரஜாசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் 43 பேருக்கு காசோலை



அம்பாறை, ஏப். 28

"தமக்கானதோர் இடம் அழகான வாழ்க்கை" எனும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 43 பயனாளிகளுக்கான (10 இலட்சம் ரூபா பெறுமதியான) வீடுகளுக்கான முதற்கட்ட காசோலைகள் (150,000 ரூபா) வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கரையோர பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா மற்றும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுல ரத்நாயக்க ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கினர்.

## சிறீலங்கா கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா பதவி விலக வாய்ப்பு?

கொழும்பு, ஏப். 28

சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா நாளை புதன்கிழமை தனது பதவியை இராஜினாமா செய்ய அதிக வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது.

2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவராகப் பணியாற்றி வரும் ஷம்மி சில்வா, பொறுப்புவாய்ந்த தரப்பினரால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கவே இந்தப் பதவியை விட்டு விலகவுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த காலங்களில் ஷம்மி சில்வா தலைமையிலான கிரிக்கெட் நிர்வாகம் குறித்து கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் முன்னாள் வீரர்கள் மத்தியில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை கிரிக்கெட்டின் வீழ்ச்சி மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தது.

இந்தச் சூழலிலேயே அவர் பதவி விலகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன்பின்னர் சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகப் புதிய இடைக்காலக் குழுவொன்று நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (அ)

## நளின் பண்டாரவின் குற்றச்சாட்டுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை மறுப்பு

கொழும்பு, ஏப். 28

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த 2023ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரர்கள் சிலருக்கு இணையவழி ஊடாக செலுத்தப்பட்ட சுமார் 380 மில்லியன் ரூபாய் கொடுப்பனவு, தவறுதலாக மீண்டும் ஒருமுறை வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று முன் தினம் வெளியிட்ட தகவலை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகம் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவின் இந்த கூற்று முற்றிலும் அடிப்படையற்றது எனவும், உண்மைத் தகவல்களை மறைத்து இது முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் பரவி வரும் இந்தத் தகவல் பொது மக்களைத் தவறாக வழிநடத்தும் செயலாகும் என அந்த அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இவ்வாறு இருமுறை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

அதிகார சபைக்குச் சொந்தமான கணக்குகளில் இருந்து அத்தகைய நிதிப் பரிமாற்றங்கள் இடம்பெறவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக அதிகார சபைக்கு எவ்வித நிதி இழப்பும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி, அதனுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையைத் தொடர்புபடுத்த எடுக்கும் எந்தவொரு முயற்சியும் பொறுப்பற்ற மற்றும் ஆதாரமற்ற செயலாகும். பாராளுமன்ற உறுப்பினரின் இந்த உள்நோக்கம் கொண்ட அறிக்கை குறித்து அதிகார சபை தற்போது மீளாய்வு செய்து வருவதுடன், இது தொடர்பாகத் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கவும் திட்டமிட்டுள்ளது. (அ)

## பயணிகளின் பயணச் சீட்டை பரிசோதிக்க பொலிஸாருக்கு எவ்வித அதிகாரமுமில்லை!

கொழும்பு, ஏப். 28

மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின்படி, பேருந்துக்குள் பயணிகளின் பயணச் சீட்டுகளைப் பரிசோதிக்க பொலிஸாருக்கு எவ்வித சட்டபூர்வமான அதிகாரமும் இல்லை என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சோதனைகளை முன்னெடுக்கும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகளுக்கு மட்டுமே உள்ளது. அவர்கள் முன்னெடுக்கும் சோதனைகளின் போது மட்டுமே பொலிஸ் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்றும், நேரடியாகத் தலையிட்டு பஸ் உரிமையாளர்கள் அல்லது ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

தற்போது பொலிஸாருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் இடையே ஒரு சுமுகமான உறவு நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், பொலிஸ்துறையை ஏவிவிட்டு பஸ் உரிமையாளர்களுடன் மோதலை உருவாக்க அரசாங்கம் முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார். (அ)

## திசைகாட்டி உறுப்பினர் உள்ளிட்ட குழு தாக்குதல்!

கொழும்பு, ஏப். 28

இப்பலோகம பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் உட்பட குழுவினர் தாக்கியதில் காயமடைந்த நிலையில், பெண் ஒருவரும் அவரது கணவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இது குறித்து இப்பலோகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் வினவியபோது, இப்பலோகம பிரதேச சபையின் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவரது மனைவிக்கு எதிராக முறைப்பாடு கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

குழுவொன்று தம்மைத் தாக்கி காயப்படுத்தியதாகக் கூறி கெக்கிராவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த தம்பதியர், மேலதிக சிகிச்சைக்காக தம்புள்ளை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இப்பலோகம, ஹிரிபிட்டியாகம விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்பலோகம பிரதேச சபையின் புத்தாண்டு விழாவின்போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## 2040ஆம் ஆண்டளவில் இலங்கையில் நான்கில் ஒரு பகுதியினர் முதியவர்!

கொழும்பு, ஏப். 28

இலங்கைத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் கணிப்புகளின்படி, 2040 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் அதாவது சுமார் 25 வீதத்தினர் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேகமாக வயதாகி வரும் இந்த மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், முதியவர்கள் டிஜிற்றல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் உள்வாங்கப்படுவதை உறுதி செய்ய "ஸ்மார்ட் வில்லேஜ்" திட்டத்தை உருவாக்க அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கடந்த 20 முதல் 24 வரை நடைபெற்ற ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் 82ஆவது கூட்டத்தொடரில், இலங்கையின் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே இந்தத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.

ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் அனைத்து வயதினருக்குமான மேம்பட்ட சமூகங்களை உருவாக்குதல் என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்த மாநாட்டில், டிஜிற்றல் புத்தாக்கம் மற்றும் காலநிலைக்கேற்ற விவசாயம் மூலம் கிராமப்புறங்களை மாற்றியமைக்கும் இலங்கையின் தேசிய மூலோபாயம் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த ஸ்மார்ட் வில்லேஜ் கருத்தாக்கமானது கிராமப்புறங்களில் உள்ள முதியவர்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களால் பின்தங்கிவிடாமல் இருப்பதை உறுதி செய்வதுடன், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளை டிஜிற்றல் முறையில் இலகுவாகப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்கிறது.

முதியோர் பராமரிப்பு நிலையங்களை மட்டும் சார்ந்திருக்காமல், முதியவர்கள் தமது சொந்த சமூகங்களுக்குள்ளேயே தங்கியிருந்து சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய சமூக அடிப்படையிலான ஒருங்கிணைந்த நீண்டகால பராமரிப்பு கட்டமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## ஏணியிலிருந்து தவறி விழுந்த பெண் பரிதாபமாக உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 28

லக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரணமுரேகம பகுதியில் ஏணியிலிருந்து தவறிவிழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்த குறித்த பெண் லக்கலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் ஏணியொன்றின் உதவியுடன் வீட்டின் கூரை மீது ஏற முயற்சித்தபோது, எதிர்பாராத விதமாக அதிலிருந்து கீழே விழுந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
28.04.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், சித்திரை 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# "மிகவும் நோய்வாய்ப்பட்டவர்கள்"

கடந்த சனிக்கிழமை வாஷிங்டன் ஹில்டன் ஹோட்டலில் வெள்ளை மாளிகை நிருபர்கள் சங்கத்தின் இரவு விருந்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை மத்திய கிழக்குப் போருடன் தொடர்புடையது அல்ல என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறினார். தான் கலந்துகொள்ளும் வைபவங்களில் வேறு காரணங்களுக்காகவும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்படலாம் என்று அவர் நம்புகிறார் போலும்.

சனிக்கிழமைச் சம்பவத்தின் சூழ்நிலையை நோக்கும் போது ட்ரம்பை கொலை செய்வதற்கான முயற்சியாக அதை சந்தேகிப்பது சற்று கஷ்டமாக இருக்கிறது. ட்ரம்ப் நிர்வாகத்தின் அதிகாரிகளை இலக்கு வைத்து அந்த துப்பாக்ககிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க சட்டமா அதிபர் கூறியது கவனிக்கத்தக்கது.

இரவு விருந்து வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்த மண்டபத்தை ஒட்டியிருந்த வரவேற்பு அறையிலேயே துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. ஜனாதிபதி ட்ரம்ப், அவரது மனைவி, துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் மற்றும் அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் மேடையில் இருந்து விரைவாக அழைத்துச் செல்லப்பட்டு ஹோட்டலில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

மற்றவர்கள் பாதுகாப்புத் தேடிச் சிதறி ஓடினர். எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் இரகசிய சேவை அதிகாரிகளினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவர் கலிபோர்னியாவைச் சேர்ந்த 31 வயதான தோமஸ் அலன் என்று அடையாளம் காணப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. 2024 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ட்ரம்ப் காயமடைந்தார். அவரது காதை உரசிச் சென்ற தோட்டாவைப் பயன்படுத்தி அவர் அரசியல் ஆதாயம் தேடிக் கொண்டார்.

"ஏன் சில மனிதர்கள் உங்களது உயிரைப் பறிக்க முயற்சிக்கிறார்கள்? " என்று கேள்விக்கு வெள்ளை மாளிகையில் ஊடகங்களுக்கு பதிலளித்த ட்ரம்ப், " எனது உயிருக்கு ஆபத்து ஏற்படுவதைக் கௌரவமாகக் கருதுவதாகச் சொல்ல விரும்பவில்லை என்றாலும், சும்மா இருப்பவர்களை யாரும் குறிவைப்பதில்லை" என்று கூறினார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து தனது " ட்ருத் சோசியல் " சமூக ஊடகத் தளத்தில் செய்த பதிவில் துப்பாக்கிச் சூட்டை நடத்தியவரை " நோய்வாய்ப்பட்ட நபர் " என்று குறிப்பிட்டிருந்தார். அந்த கூற்றைப் பொறுத்தவரை, அவருடன் எவரும் உடன்படாமல் இருக்க முடியாது.

சரியான மனநிலையில் உள்ள எவரும் ஆயுதபாணியாக கடுமையான பாதுகாப்பு வளையங்களை ஊடுருவிச் சென்று நிராயுதபாணிகளாக நிற்கும் குழுவினரையோ அல்லது நாட்டின் ஜனாதிபதியையோ கொலைசெய்வதற்கு முயற்சிக்கமாட்டார்கள். இந்த அளவுகோலின்படி தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கலிபோர்னிய நபரைப் போன்றே கொலைகளைச் செய்பவர்களும் கொலைக்கு உத்தரவிடுபவர்களும் " மிகவும் நோய் வாய்ப்பட்டவர்களே."

கடந்த வருடம் ஜூனில் ஈரான் மீது குண்டுவீச்சுத் தாக்குதல்களை அமெரிக்கா நடத்திய போது தற்போதைக்கு ஈரானிய தலைவர்களை கொலை செய்யும் நோக்கம் இல்லை என்று ட்ரம்ப் கூறினார். பிறகு இவ்வருடம் பெப்ரவரி 28 முதல் ஈரான் மீதான குண்டுவீச்சுக்களில் ஈரானின் அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி காமெனி உட்பட பல அரசியல் தலைவர்களும் இராணுவ உயரதிகாரிகளும் கொல்லப்பட்டனர். அதைக் கண்டு குதூகலித்த ட்ரம்ப், அலி காமெனிக்கு பிறகு அதியுயர் தலைவராக வருபவரும் உயிர் வாழ்வது சாத்தியமில்லை என்று கூட பிரகடனம் செய்தார்.

கடந்த சனிக்கிழமை துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தைக் கேட்டு மேடையில் இருந்து தப்பியோடிய ட்ரம்ப், அலி காமெனியைப் படுகொலை செய்ததை பெருமையாகப் பேசும் வாய்ப்பை ஒருபோதும் தவறவிடுவதில்லை. போர் என்ற பெயரில் மக்கள் வசிக்கும் பகுதிகள் குறிப்பாக, மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகள் மீது குண்டுவீச்சுக்களை வகைதொகையின்றி நடத்திவிட்டு உயிரிழப்புகளையும் அழிவுகளையும் பார்த்து வெற்றிப் பெருமிதமடையும் ட்ரம்பையும் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவையும் " மிகவும் நோய்வாய்ப்பட்டவர்கள் " என்றுதானே அழைக்க வேண்டும்.

# கெஹலிய தொடர்புபட்ட தரமற்ற மருந்து விவகாரம் முக்கிய ஆவணங்கள் அடங்கிய களஞ்சியம் தீக்கிரை

கொழும்பு, ஏப். 28

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தொடர்புபட்ட தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்து கொள்வனவு மோசடி வழக்கின் முக்கிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையொன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது.

இது ஆதாரங்களை அழிப்பதற்கான திட்டமிட்டச் செயலா என்ற பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்திய சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

சர்ச்சைக்குரிய மருந்து கொள்வனவு காலப் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்து மாதிரிகள் கொள்வனவு தொடர்பான கோப்புகள் மற்றும் முக்கிய ஆவணங்கள் இந்தக் களஞ்சியசாலையிலேயே வைக்கப்பட்டிருந்தன.

இந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள நிலையில், தீ விபத்து ஏற்பட்டுள்ளமை விசாரணைகளைப் பாதிக்கும் என கவலை வெளியிட்டுள்ளார்.

இந்தத் தீ விபத்து இயற்கையானதா அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்ட சதிச் செயலா என்பதைக் கண்டறிய குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உடனடியாக முழுமையான விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ வலியுறுத்தியுள்ளார். (அ)

# அஞ்சல் ஊழியர்களின் கொடுப்பனவில் மோசடி; இலஞ்ச ஆணைக்குழுவின் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 28

அஞ்சல் ஊழியர்களில் ஒரு குழுவினர் முறையற்ற விதத்தில் 10 மில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகையை மேலதிக நேர கொடுப்பனவாகப் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து, இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சிவில் சமூக அமைப்பு ஒன்றினால் கடந்த 2025 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டை பரிசீலித்த பின்னர், அது தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் கே.ஜி. லனெரோல் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டின் இறுதியில் அஞ்சல் மா அதிபர் ருவன் சத்குமாரவினால் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை விசாரணைகளின் மூலம் இந்த முறைகேடுகள் கண்டறியப்பட்டன.

இருப்பினும், அரச நிதி முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய வருகைப்பதிவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு முறைகளில் வெளிப்படைத்தன்மையை பேண வேண்டியது அவசியம் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# 2.5 மில்லியன் டொலர் திருட்டு குறித்து சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணை

கொழும்பு, ஏப். 28

திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இணையவழிக் குற்றவாளிகளால் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், தொழில்நுட்பக் கோளாறு காரணமா அல்லது நிர்வாக ரீதியான வீழ்ச்சி காரணமா என்பது குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திறைசேரியின் பொதுக் கடன் முகாமைத்துவ அலுவலகம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த ஏழு அதிகாரிகளிடம் இதுவரை வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக, குறித்த அதிகாரிகள் பயன்படுத்திய கணினிகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டு, தடயவியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

குற்றவாளிகளைக் கண்டறியவும், பணப் பரிமாற்றங்களைத் தடயமறியவும் தேவையான முக்கிய தகவல்கள் தற்போது அவுஸ்திரேலிய பொலிஸ்துறையுடன் பரிமாறப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வீதி அபிவிருத்தி...

உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இரட்டை கொடுப்பனவுகள் குறித்த குற்றச்சாட்டுகள் "அடிப்படையற்றவை" என பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்த கருத்திற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நாமல் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

குறித்த பதிவில் "அமைப்பில் ஏற்பட்ட பிழை" காரணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு 263 மில்லியன் ரூபாய் தவறுதலாக அனுப்பப்பட்டதை இலங்கை வங்கியின் நிதித் திரும்பப் பெறும் அறிவித்தல் உறுதிப்படுத்துவதாக அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு தவறுதலாக அனுப்பப்பட்ட தொகையில் 51 மில்லியன் ரூபாவிற்கும் அதிகப்படியான தொகை இன்னும் கணக்கில் காட்டப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தியோகபூர்வ ஆவணங்கள் உண்மையை உணர்த்தும் போது, பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன இதனை எதன் அடிப்படையில் மறுக்கிறார் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தகுந்த ஆதாரங்கள் இருக்கும் போது, அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த மறுப்பை எவ்வாறு நியாயப்படுத்துகிறார் என்றும் நாமல் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், கடந்த காலங்களில் பேசப்பட்ட "திறைசேரி மின்னஞ்சல் மோசடி" போன்ற விவகாரங்களையும் இதனுடன் தொடர்புபடுத்திய அவர், அரசாங்கம் உண்மைகளை மறைக்காமல் பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (அ)

## மனைவி அவரது சகோதரன்...

நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடைபெற்று வருகின்றது. நேற்று வழக்குக்காக குறித்த பெண்ணும் அவரது சகோதரனும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலையாகிவிட்டு வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

அவர்கள் வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது திடீரென அவர்களை வீதியில் இழுத்து விழுத்திய கணவன், மனைவி மீதும் அவரது சகோதரன் மீதும் கத்திக்குத்து தாக்குதல் மேற்கொண்டார்.

இதன்போது இருவரும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சந்தேகநபரான கணவனை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணை அவரது சகோதரனே தன்னிடமிருந்து பிரித்ததாகக் கூறியே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-05)

## எதிரணி கோரிய பாராளு...

இருப்பினும், அரசாங்கம் அதை நிராகரித்துவிட்ட தாக எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித் துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 28 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 15
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : துவதாசி




**மேடம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். அதிர்ஷ்டம் நிறைந்த நாள்.

**இடபம்**
நண்பர்களின் ஆதரவு கிட்டும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சொந்த-பந்தங்கள் மதிக்கும்படி நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து செல்லும். உறவினர் நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். திடீர் பயணங்கள் உண்டு.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். சிறப்பான நாள்

**விருட்சிகம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். நம்பிக்கை குறித்து ஆலோசித்து சில முடிவுகளை எடுப்பீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் பல விஷயங்களை நீங்களே பார்க்க வேண்டி வரும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். குடும்பத்தில் பல விஷயங்களை நீங்களே பார்க்க வேண்டி வரும். இழுத்தடிப்பார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

# போதை மாத்திரைகளுடன் யாழில் 6 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளுடன் மருந்து விற்பனைப் பிரதிநிதிகள் உள்ளிட்ட 06 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பகுதியில் போதை மாத்திரை விற்பனை நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 06 இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 06 பேரிடமிருந்தும் 60 போதை மாத்திரைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 06 பேரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


விசாரணைகளில் இரு இளைஞர்கள் மருந்து விற்பனை பிரதிநிதிகள் எனத் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# சோரன்பற்று சரஸ்வதி சனசமூக நிலையக் கட்டடத்துக்கு அடிக்கல்

கிளிநொச்சி, ஏப். 28
கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி சோரன்பற்று சரஸ்வதி சன சமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா சரஸ்வதி சன சமூக நிலைய தலைவர் கைலாயபிள்ளை சிந்துயன் தலைமையில் நேற்று முன் தினம் பிற்பகல் 3:30 மணியளவில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக ஆலய வழிபாடுகள் இடம்பெற்று அங்கிருந்து முதல் கல் எடுத்துவரப்பட்டு மைதானத்தில் விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு அடிக்கல்கள் நாட்டப்பட்டன.



முதல் கல்லை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நாட்டிவைக்க சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பச்சிலை பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், சோரன் பற்று கணேசா வித்தியாலய அதிபர் சோமசுந்தரம் சிவதாசன், சோரன் பற்று கிராம அலுவலர் அருள்பிரகாஸ் சுபாசினி உட்பட பலரும் நாட்டிவைத்ததை தொடர்ந்து பலரும் நாட்டி வைத்தனர்.

இதில் பச்சிலை பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச மக்கள், அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

# ஊர்வணிகன்பற்று காணி அபகரிப்பு ஜனாதிபதிக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

கிளிநொச்சி, ஏப். 28
கிளிநொச்சி, பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் கீழுள்ள ஊர்வணிகன்பற்று கிராமத்தில் பல தலைமுறைகளாக மக்கள் வாழ்ந்து வந்த பூர்வீக நிலங்களை இராணுவத் தேவைக்காக நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரி, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஜனாதிபதிக்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், ஊர்வணிகன்பற்று கிராமமானது மிக நீண்ட கால வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதுடன், பல தலைமுறைகளாக தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழ்விடமாகப் பேணி வந்த நிலமாகும். யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில், மக்களின் விருப்பத்திற்கு மாறாக இலங்கை இராணுவத்தினால் இக்காணிகள் கையகப்படுத்தப்பட்டது டன், இன்றுவரை மக்கள் தமது சொந்த நிலங்களுக்குள் நுழைய முடியாத துர்ப்பாக்கிய நிலையே நீடிக்கின்றது.

தற்போது இராணுவத்தின் 4ஆவது பற்றாலியன் மின் மற்றும் இயந்திரப் பொறியியல் படையணி அமைப்பதற்காகச் சுவீகரிக்கப்படவுள்ள முப்பது ஏக்கர் நிலப்பரப்பானது, இருபது தனிப்பட்ட உரிமையாளர்களுக்குச் சொந்தமானதாகும்.

இவ்விடத்திலேயே மக்களின் வாழ்விடங்கள், வாழ்வாதாரப் பயிர்ச்செய்கைகள் மற்றும் அவர்களது கலை, கலாசார விழுமியங்களுடன் ஒன்றிய முத்துமாரி அம்மன் ஆலயம், பொது நோக்கு மண்டபம், சிறுவர் முன்பள்ளி உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களும் சமூகக் கட்டமைப்புகளும் அமைந்துள்ளன.

தமது பூர்வீக அடையாளங்கள் அனைத்தையும் கொண்ட இந்த நிலத்தை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நோக்கில், கடந்த 2026.04.02 அன்று இராணுவத்தினால் நில அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவிருந்தன. எனினும், பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களின் தன்னெழுச்சியான எதிர்ப்புப் போராட்டங்கள் காரணமாக இப்பணிகள் அன்றைய தினமே இடைநிறுத்தப்பட்டது.

இவ்விடயத்தின் பாரதூரமான தன்மையைக் கருத்திற்கொண்டு, கடந்த 2026.04.07 அன்று என்னால் பாராளுமன்றத்தில் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட மக்களின் குமுறல்களையும் சபையில் பதிவு செய்திருந்தேன். தொடர்ந்து அன்றையதினம் மாலை 02.00 மணிக்கு தங்களின் தலைமையில் பாராளுமன்ற குழு அறை 01 இல் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு தொடர்பான அமைச்சு சார் ஆலோசனைக் கூட்டத்திலும் இக் காணி விடயம் தொடர்பில் தங்களுக்கு தெளிவாக விளக்கப்படுத்தப்பட்டிருந்தது.

"மக்களின் நிலம் மக்களுக்கே" என்ற உயரிய கொள்கையின் அடிப்படையில் நின்றும், மக்களின் நலன் சார்ந்தும் செயற்பட்டு வரும் தாங்கள் தமிழ் மக்களின் இப்பூர்வீக சொந்த நிலத்தை விடுவிப்பீர்கள் என்ற மிகுந்த நம்பிக்கையை கொண்டுள்ளனர். (அ)

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் மே 17 இல்

யாழ்ப்பாணம், ஏப். 28
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் மே 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி தலைமையில் கந்தர்மடம் வேதாந்த மடத்திற்கு அருகில் உள்ள அறிவாலயம் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது சங்கத்திற்கான அடுத்த ஈராண்டுகளுக்கான ஆட்சிக்குழு தெரிவு செய்யப்படும் என சங்கச் செயலாளர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அதிகாரத்தை மீண்டும் கோருவதற்கு நாமலுக்கு எவ்வித உரிமையுமில்லை!

## சாடுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 28

ராஜபக்ஷர்கள் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி நாட்டு மக்களை ஏழ்மையாக்கினார்கள். ராஜபக்ஷர்கள் மீதான வெறுப்பினால் தான் மக்கள் அநுரகுமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள். அதிகாரத்தை மீண்டும் கோருவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

கொலன்னாவ பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி ஊழலுக்கு எதிராக செயற்படும், கடந்த கால ஊழல்வாதிகளை சிறைக்கு அனுப்பும் என்று எதிர்பார்த்தே நாட்டு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை தெரிவு செய்தார்கள்.ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்த ஒன்றரை வருட காலத்தில் பல ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

ஆனால் அவற்றுக்கு அமைச்சரவை பொறுப்புக்கூறவில்லை. அரச அதிகாரிகளே பலியாக்கப்பட்டுள்ளார்கள்.

ராஜபக்ஷர்களின் ஊழல் மோசடிகள் குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன உட்பட பல ஊழல்வாதிகள் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அன்றும் குறிப்பிட்டோம். இன்றும் குறிப்பிடுகிறோம்.

பொருளாதார மீட்சி பற்றி நாமல் ராஜபக்ஷ பேசுவது வேடிக்கையாகவுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் காலத்தில் தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. அந்த அமைச்சரவையில் சகல ராஜபக்ஷர்களும் அங்கம் வகித்தார்கள்.

ராஜபக்ஷர்கள் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி நாட்டு மக்களை ஏழ்மையாக்கினார்கள். ராஜபக்ஷர்கள் மீதான வெறுப்பினால் தான் மக்கள் அநுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள். அதிகாரத்தை மீண்டும் கோருவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.-என்றார். (அ)

# டிஜிற்றல் தொழில்நுட்பம் ஊடாக அரச சேவைகள்!

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, அரச சேவைகளை டிஜிற்றல் தொழில்நுட்பம் ஊடாகத் தொலைதூர முறையில் முன்னெடுப்பதற்கான புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு போர்க்காலச் சூழலால் ஏற்பட்டுள்ள எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடுகளைச் சமாளிக்கும் வகையில், அரச சேவைகளைத் தொலைதூரத்திலிருந்து வழங்குவதற்கான டிஜிற்றல் வழிகாட்டல்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஈரான் போர் உள்ளிட்ட பிராந்தியப் பதற்றங்களால் தேசிய எரிபொருள் கையிருப்புக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்தைக் குறைப்பதற்காக, அலுவலக சேவைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன்னெடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதற்காக டிஜிற்றல் பொருளாதாரம் மற்றும் பொது நிர்வாக அமைச்சுக்கள் இணைந்து இந்தப் புதிய திட்டத்தை வகுத்துள்ளன.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அரச சேவை முகாமைத்துவக் குழுவின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் முடிந்தவரை தொலைதூரச் சேவை முறைக்கு மாறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு டிஜிற்றல் பொருளாதார அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதன்படி, டிஜிற்றல் பொருளாதார அமைச்சினால் அரச நிறுவனத் தலைவர்களுக்காக 'இடைக்கால வழிகாட்டல்கள்' வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றை அரச நிறுவனத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் (https://mode.gov.lk/docs/guidelines) என்ற இணைய முகவரியின் ஊடாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் அதேவேளை, பொதுமக்களுக்கான அரச சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதே இந்த டிஜிற்றல் மாற்றத்தின் முதன்மை நோக்கமாகும். (அ)

# அநுராதபுரம் வன காப்பகத்தில் அடையாளம் தெரியாத சடலம்!

கொழும்பு, ஏப். 28

அநுராதபுரம் மாவட்டம், இப்பலோகமவில் உள்ள வனக் காப்பகம் ஒன்றில் மர்மமான முறையில் உயிரிழந்த அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 55 மதிக்கத்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக கண்டெடுக்கப்பட்ட நபர் உயிரிழந்து சில நாள்கள் ஆகியிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் இப்பலோகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அரிசி, தண்ணீர்ப் போத்தல் அதிக விலைக்கு விற்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 28

அரிசி மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்களை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையங்களை முற்றுகையிட நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த சில நாள்களாக கண்டி, திருகோணமலை, காலி, தங்காலை போன்ற பகுதிகளில் இவ்வாறான சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை கண்டறிய இவ்வாறான சோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

# விமான நிலையத்தில் கைதான 22 பிக்குகளுக்கு தடுப்பு காவல்!

கொழும்பு, ஏப். 28

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 110 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய "குஷ்" மற்றும் "ஹஷ்" போதைப் பொருள் தொகையுடன் கைதான 22 பிக்குகளையும் 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய நீர்கொழும்பு மேலதிக நீதவான் சுபானி அபேசேகர உத்தரவிட்டுள்ளார்.


இதேவேளை, இந்தச் சுற்றுப்பயணத்தை ஒருங்கிணைத்த மூவரும் கடந்த மாதமும் 12 பேரைக் கூட்டிச் சென்று தாய்லாந்துக்குச் சென்று வந்துள்ளதுடன், அடுத்த மாதம் மற்றுமொரு குழுவை அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பறவைகள் சரணாலயச் சூழலில் குப்பை கொட்டுவோர் மீது இனி வழக்கு தாக்கல்!

## தென் எருவில் பற்று பிரதேச சபை நடவடிக்கை



மட்டக்களப்பு, ஏப். 28

குருக்கள்மடம் ஏத்தாலைக் குளம் பறவைகள் சரணாலயப் பகுதியில் குப்பைகளைக் கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.


மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட குருக்கள்மடம் ஏத்தாலைக்குளம் பறவைகள் சரணாலயம் ஈரநிலப்பகுதி பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், அப்பறவைகள் சரணாலயத்தைச் சூழவுள்ள வீதிகளில் பயணிப்பவர்கள் குப்பைகளையும், கழிவுகளையும், மூட்டை மூட்டையாக அக் குறித்த பிரதேசத்தில் கொண்டு வீசிவிட்டுச் செல்வதனால் அச்சரணாலயத்திலுள்ள பறவைகளுக்கும், அச்சூழலுக்கும் பலத்த துர்நாற்றத்தினால் பலத்த பாதிப்பு ஏற்படுவதாகவும், பொதுமக்கள் வீதியினால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பலர் வாகனங்களில் வந்து குப்பைகளை இடும் சந்தர்ப்பங்களில் அவர்களை கையும் மெய்யுமாகவும் மக்கள் பிடித்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையில் அப்பகுதிக்கு சென்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ் நிலமையை பார்வையிட்டுள்ளார்.

அவரிடம் குருக்கள்மடம் பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய அப்பகுதியில் கண்காணிப்புக் கமரா பொருத்தி அவதானித்து இவ்வாறு தொடர்ச்சியாக குப்பைகள் வீசும் சந்தர்ப்பங்களில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஊடாக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக பிரதேச சபை தவிசாளர் இதன்போது தெரிவித்தார். (அ)

# மாளிகைக்காடு மையவாடிக்கு நிரந்தர வேலி அமைக்கும் பணி




அம்பாரை, ஏப். 28

மாளிகைக்காடு மையவாடி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் அண்மைக் காலமாக தீவிரமடைந்துவரும் கடலரிப்பு அபாயத்தை தடுக்கும் பொருட்டு, கடலரிப்பைத் தடுப்பதற்கான "கல்வேலி" பாதுகாப்புச் செயற்றிட்டம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.பர்ஹான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் அரசியலமைப்புப் பேரவை உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா ஆகியோர் கலந்து கொண்டு இப்பணியை ஆரம்பித்து வைத்தனர்.

கடலரிப்பால் பாதிக்கப்பட்டுவரும் மாளிகைக்காடு மையவாடியின் கடலரிப்பைத் தடுப்பதற்காக நிரந்தர "கல்வேலி" அமைக்கும் இவ்வேலைத்திட்டத்திற்காக சுமார் 20 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# தேசிய "புண்ணிய கிராமம்" பெருவிழா செங்கலடியில்



மட்டக்களப்பு, ஏப். 28

மட்டக்களப்பு, ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேசத்தில் ஆன்மீகத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் நோக்கில், "புண்ணிய கிராமம்" எனும் விசேட நிகழ்வு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை செங்கலடி ஐயங்கேணி சிறீ ஆதி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில், ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகம் மற்றும் ஆதி மாணிக்கப் பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை ஆகியவை இணைந்து இந்த ஆன்மீக விழாவினை ஏற்பாடு செய்திருந்தன.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" எனும் உயரிய தாரக மந்திரத்துடன் காலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரத்தால் நந்திக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஆலயப் பிரதம குரு க.சுவர்னேஸ்வரன், அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர், பிரதேச செயலாளர் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் இணைந்து மங்கள விளக்கேற்றி நிகழ்வை உத்தியோகபூர்வமாகத் தொடங்கி வைத்தனர்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மேடையேறின. (அ)




# மலைநாட்டு மகிழ்ச்சி திட்டத்தின் கீழ் 34 புதிய வீடுகளுக்கு அடிக்கல் நாட்டல்

பதுளை, ஏப். 28

"செழிப்பான நாடு அழகான வாழ்க்கை" என்ற கொள்கை அறிக்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில், மண்சரிவு அதிக ஆபத்து காணப்படும் பகுதிகளில் வசிக்கும் தோட்ட மக்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் முக்கிய நடவடிக்கையாக "மலைநாட்டு மகிழ்ச்சி" திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் புதிய வீடமைப்பு திட்டங்கள் இரண்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், சமூக அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்ன தலைமையில், பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவின் நாயபெத்த தோட்டத்திலும், ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் பிரிவின் மலவன் பகுதியில் இடம்பெற்றது.

தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி, பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள நாயபெத்தா தோட்டத்தில் மண்சரிவு ஆபத்தில் உள்ள 11 குடும்பங்களுக்கும், ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் பிரிவின் மலவன் பகுதியில் ஆபத்தில் உள்ள 23 குடும்பங்களுக்கும் வீடுகள் அமைக்கப்படுகின்றன.



மொத்தம் 34 வீடுகள் அமைப்பதற்காக அரசாங்கம் ரூபாய் 108 மில்லியனுக்கும் அதிக நிதியை ஒதுக்க திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டு அலகுக்கும் 28 இலட்சம் ரூபாய் செலவிடப்படுவதுடன், உட்கட்டமைப்பு வசதிகளுக்காக கூடுதலாக ரூ.4 இலட்சம் வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு பயனாளிக்கும் 10 பர்ச் நிலப் பரப்பும் வழங்கப்படுகிறது.

# காரைதீவில் தந்தை செல்வாவின் நினைவு தினம்

காரைதீவு, ஏப். 28

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் 49ஆவது நினைவேந்தல் நிகழ்வும், வட்டுக்கோட்டை தீர்மானத்தின் 50 ஆவது ஆண்டு விழா நிகழ்வும் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை காரைதீவில் நடைபெற்றது.

இந்நிகழ்வு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும் , காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கி.ஜெயசிறில் தலைமையில் தலைமைக் கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

# மடத்தடி மீனாட்சியம்மனின் பாற்குடபவனி



காரைதீவு, ஏப். 28

வரலாற்று பிரசித்தி பெற்ற மரத்தடி மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார மகோற்சவத்தின் பாற்குடபவனி நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மகோற்சவ பிரதம குரு சிவ சிறீ அ.மு.நிஷாந்தன் குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவ சிறீ கிருஷ்ண பிரியதர்ஷன் குருக்கள் முன்னிலையில் பாற் குட பவனி கிரியைகள் நடைபெற்றன.

நூற்றுக்கணக்கான மகளிர் பால்குடம் ஏந்தி வலம்வந்தார்கள்.

முன்னதாக இப் பாற்குடபவனி சிறீ சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி மீனாட்சி அம்பாள் ஆலயத்தை அடைந்து அங்கு பால் சொரியப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆளுநரின் விசாரணைக...

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட மரக்கறிச் சந்தையைப் பழைய இடத்திற்கு மாற்றுவதற்குச் சபை மேற்கொண்ட தீர்மானம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, தவிசாளர் மற்றும் உறுப்பினருக்கு எதிராக விசாரணை நடத்த முன்னாள் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தலைமையில் விசாரணைக் குழு ஒன்று கடந்த 2026 மார்ச் 12 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்பட்டிருந்தது. இந்த விசாரணைக் குழுவின் முன்னிலையில் 2026 ஏப்ரல் 21 ஆம் திகதி முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கு எதிராக மனுதாரர்கள் மேல் நீதிமன்றத்தை நாடியிருந்தனர்.

மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றத்தில் முக்கிய வாதங்களை முன்வைத்தார். நகர சபையின் ஜனநாயக ரீதியான தீர்மானங்கள் குறித்து விசாரணை நடத்த முடியாது என்றும், இது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றமாகாது என்றும் அவர் வாதிட்டார்.

மேலும், 2026 ஏப்ரல் 08 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி என்பவர் குறித்த வர்த்தமானி அறிவித்தல் உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு முன்னரே அதனைச் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கருத்துத் தெரிவித்திருந்தமையைச் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, இந்த விசாரணை நடவடிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும், தவிசாளரைப் பதவியிலிருந்து நீக்கும் முயற்சியாகும் என்றும் வாதிட்டார்.

குறிப்பாக, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி நகரசபைகளை இலக்கு வைத்து இவ்வாறான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

சட்டத்தரணியின் வாதங்களை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா, மனுதாரர்களின் வாதங்களில் முகாந்திரம் இருப்பதாகக் கருதி, இந்த வழக்கு விசாரணை நிறைவடையும் வரை தவிசாளர் மற்றும் உறுப்பினருக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுக்கக்கூடாதென இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகளான பெனார்சி பிரதீபன் மற்றும் சி.அபினாஸ் ஆகியோரின் அனுசரணையுடன் கலாநிதி கு. குருபரன் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## அர்ச்சுனா எம்.பி தாக்கினார்...

போதே பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா காலால் உதைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட நபர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டார். (அ)

## மே தினத்தில் பங்கேற்கு...

ஏற்படுத்தும் புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள காலாவதியான அரசியல் கலாச்சாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, அரசியல் சூதாட்டத்திலிருந்து விலகி, கொள்கை அடிப்படையிலான சமூக ஜனநாயகமும் சமூக சந்தைப் பொருளாதாரமும் கொண்ட நடுத்தரப் பாதையில் நாட்டை முன்னேற்றத் தயாராக இருப்பதாக சஜித் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய அரசியல் பயணத்தில் இணைந்துகொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, அதன் ஆதரவாளர்கள் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்காக செயற்படும் முற்போக்கான மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

மேலும், எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி கொழும்பு மாளிகாவத்தை பி.டி. சிரிசேன விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் இலட்சக்கணக்கானோர் பங்கேற்று இந்தப் பயணத்தில் கைகோர்க்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார். (அ)

## வழக்கு விசாரணையில்

அந்தத் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி ரிஸாத் பதியுதீன் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்னிலையில் மனு பரிசீலனைக்கு வந்தபோது, அமர்வின் தலைவராக இருந்த நீதியரசர் ஏ.எச்.எஸ்.டி. நவாஸ், தனிப்பட்ட காரணங்களால் வழக்கிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மேல்முறையீட்டு மனுவின் அடுத்த கட்ட விசாரணைகளை முன்னெடுக்க புதிய நீதியரசர்கள் அமர்வு நியமிக்கப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் வழக்கின் மேலதிக விசாரணைகள் தொடரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அர்ச்சுனா எம்.பி

குறித்த காணிக்குள் பாராளுமன்ற உறுப்பினருக்கும் மற்றைய தரப்பினரும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் தனது கைத்துப்பாக்கியை காட்டி மிரட்டியமை தொடர்பிலான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

கைத்துப்பாக்கியை காட்டி மிரட்டிய சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் நேற்று திங்கட்கிழமை இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு வாக்கு மூலம் அளிக்க அர்ச்சுனா இராமநாதனை அழைத்து , வாக்குமூலங்களை பதிவு செய்த பின்னர் அவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை அர்ச்சுனா எம்.பியை எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

## செம்மணி மனித புதை...

அவற்றில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டு மேலதிக ஆய்வுகளுக்காகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் மேலும் பல எலும்புக்கூடுகள் காணப்படுவதற்கான சான்றுகள் கிடைத்துள்ளதால், மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்தில் வலியுறுத்தியிருந்தார்.

இதற்காக சுமார் 8 வார காலப்பகுதி தேவை என விடுக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு அமைய, நீதிமன்றம் அகழ்வுப் பணிகளுக்கான அனுமதியை வழங்கியிருந்தது.

கடந்த செப்ரெம்பர் 06ஆம் திகதியுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 45 நாட்களின் பின்னர் நிறைவடைந்தன.

அதனைத் தொடர்ந்து பருவமழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக புதைகுழிக்குள் வெள்ளம் புகுந்ததால், மூன்றாம் கட்டப் பணிகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

தற்போது காலநிலை சீரடைந்துள்ள நிலையில், சுமார் 8 மாதங்களுக்குப் பிறகு நேற்று பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த முக்கியமான அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்காக நிதி அமைச்சினால் 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் இந்த அகழ்வுப் பணிகள் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. (அ)

## சட்டத்தின் முன்...

சட்டத்தின் முன்னால் பிக்குகள் உட்பட அனைவரும் சமம் என்பதை நாம் அனைவரும் அறிவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இச்சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கிறோம்.

இச்சம்பவம் தொடர்பாக மகா சங்கத்தினரின் அறிவுரை மற்றும் ஆலோசனைகளுடன் ஒரு பக்கத்தில் செயற்படும் அதேவேளை, சட்டபூர்வமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் அதே முறையில் எடுப்போம்.

குறிப்பாக நாங்கள் ஆட்சிக்கு வந்த நாள் முதல், இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, அதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஒருவருடைய தராதரத்தைப் பார்த்து எடுப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியும்.

சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். பலவீனமானவர்களுக்கு ஒரு சட்டமும் பலமானவர்களுக்கு இன்னொரு சட்டமும் செயல்பட இடமில்லை.

யாராவது சட்டவிரோதமாகச் செயல்பட்டால், அதில் தலையிட்டு அவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்-என்றார்.

## தையிட்டி விகாரை காணி...

முன்னெடுக்கப்படவுள்ளதாக காணி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச்செயற்பாடு காணி உரிமையாளர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் அவர்கள் காணி உரித்து நிர்ணய திணைக்களம் ஊடாக அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுவதனை நிராகரிப்பதாகவும் காணி உரிமையாளர்கள் தமது கடிதத்தில் ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ளார்கள்.

குறித்த விடயம் தொடர்பிலான ஆட்சேபனைக் கடிதம் காணி உரிமையாளர்களால் கடந்த 22.04.2026 அன்று தங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அவர்களது கடிதம் தொடர்பில் மாவட்ட செயலாளராகிய தாங்கள் எந்தவிதமான அக்கறையும் செலுத்தாத நிலையில், அவர்களது கோரிக்கைக்கு மாறாக நேற்று முன்தினம் 23.04.2026 வலி வடக்கு பிரதேச செயலாளருக்கு தாங்களால் வழங்கப்பட்ட அறிவுத்தல்களின் பிரகாரம், குறித்த காணிகளை 28.04.2026 அன்று காலை 8.00 மணிக்கு அளவீடு செய்வது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர்களுக்கு பிரதேச செயலாளரால் அனுப்பப்படும் கடிதம் தபால் மூலம் சென்றடைவதற்கான போதிய கால அவகாசம் எதுவும் வழங்கப்படாமலே தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

வெவ்வேறு இடங்களில் வசிப்பவர்களுக்கு உரிய கால அவகாசம் வழங்காமல், நடைமுறைகளுக்கு மாறாக காணி உரிமையாளர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு அவசரமாக அளவீட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமையானது, காணி உரிமையாளர்கள் மத்தியில் தேவையற்ற குழப்பங்களையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

காணிகளை விடுவிப்பது தொடர்பான வழமையான நடைமுறைகளுக்கு மாறாக இக்காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அணுகுமுறை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்முடன் எந்தவிதமான கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடந்த 36 ஆண்டுகளுக்கு மேலாக காணி உரிமையாளர்கள் தமது காணிகளுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காணிகளது வேலிகள், அங்கிருந்த மரங்கள், கட்டடங்கள் உள்ளிட்ட அனைத்து அடையாளங்களும் அழிக்கப்பட்டு, புதிய கட்டுமானங்கள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் திடீரென காணி உரிமையாளர்களை அழைத்து எல்லைகளைக் காண்பிக்குமாறு கோருவது நியாயமற்ற செயற்பாடு என்றும், காணி உரிமையாளர்களுக்கு திட்டமிட்டு பாதிப்பை ஏற்படுத்தும் முயற்சியாகுமெனவும் காணி உரிமையாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

காணிகளது எல்லைகள் சிதைக்கப்பட்டுள்ள நிலையில், காணிக்கு உரித்தான பெற்றோர் பலர் உயிருடன் இல்லாத நிலையில் அவர்களது பிள்ளைகளால் 36 வருடங்களின் பின்னர் திடீரென காணி உரித்து நிர்ணய திணைக்களத்திற்கு காணிகளது எல்லைகளை உடனடியாகக் காண்பிப்பது சிரமமான விடயமாகும்.

இந்நிலையில், கடந்த 17 ஆண்டுகளாக ஆயுதப் படைகளது பிடியிலிருந்த காணிகள் அவ்வப்போது விடுவிக்கப்பட்ட பின்னர், மக்கள் தமக்கிடையேயும் காணி தொடர்பான உறவினர்கள் மற்றும் விடயம் தெரிந்தவர்களுடனும் கலந்துரையாடி, எல்லைகளைக் காண்பித்து அளவீடுகளைச் செய்து தமது காணிகளை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

அந்தச் சந்தர்ப்பங்களில் காணி உரித்து நிர்ணய திணைக்களம் அதில் தலையீடு செய்திருக்கவில்லை. காணி உரித்து நிர்ணய திணைக்களத்தின் தலையீடின்றிய அதே நடைமுறைகளைப் பின்பற்றியே தமது காணிகளையும் விடுவிக்க வேண்டுமென இக் காணிகளது உரிமையாளர்கள் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றார்கள்.

எனினும் அவர்களது நியாயமான கோரிக்கைகள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டு அவர்களது விருப்பத்திற்கு மாறாகக் காணி உரித்து நிர்ணய திணைக்களமூடாக காணிகளை அளவீடு செய்ய முற்படுவதானது பாரிய சந்தேகத்தினை தோற்றுவித்துள்ளது.

மேலும் குறித்த காணி அளவீடு தொடர்பாக வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரினால் காணி உரிமையாளர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், "யாழ்ப்பாண திஸ்ஸ விகாரை தொடர்பான காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள அளவீட்டு நடவடிக்கை தொடர்பானது" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தலைப்பிட்டதன் மூலமாக குறித்த விகாரையானது சட்டவிரோதமானது என்ற உண்மை திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளதுடன், காணி உரித்து நிர்ணய திணைக்களம் ஊடாக அளவீடு செய்து விடுவித்தல் என்னும் பெயரில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கையானது, சட்டவிரோத விகாரைக்கு காணிகளைக் கையகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியே என்ற சந்தேகத்தினையும் வலுப்படுத்துகின்றது.

எனவே இம் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் குறித்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும் வகையில், குறித்த காணி உரிமையாளர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு அழைத்துக் கலந்துரையாடிய பின்னர், காணி உரிமையாளர்களது விருப்பத்தின் அடிப்படையில், வெளிப்படையான எழுத்து மூலமான இணக்கப்பாடு எட்டப்பட்டு காணி விடுவிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்-என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# திறைசேரிக் கொள்ளையில் ஜனாதிபதிக்கும் தொடர்பா?

## சாகர காரியவசம் கேள்வி



கொழும்பு, ஏப். 28

அரச திறைசேரியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய நிதி மோசடி தொடர்பில் அதற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கு நேரடித் தொடர்பு இருக்கின்றதா என்ற பலமான சந்தேகம் எழுந்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அரச திறைசேரியில் இடம்பெற்ற இந்தக் கொள்ளைச் சம்பவத்தை "சுதந்திர சட்டத்தரணிகள்" அமைப்பு கண்டறிந்து முறைப்பாடு செய்ததன் பின்னரே இது வெளிச்சத்திற்கு வந்ததாகவும், அதுவரை அரசாங்கம் இந்தத் திருட்டை மக்களிடமிருந்து மறைக்க முயற்சி செய்துள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாம் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், வரலாற்றில் திருட்டுத்தனமான அரசியலில் ஈடுபட்ட ஒரு குழுவிடம் நாடு ஒப்படைக்கப்பட்டதன் விளைவாக இன்று திறைசேரியே கொள்ளையடிக்கப்பட ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

இந்தக் கொள்ளையை ஒரு ஹக்கர் மீது சுமத்த அரசாங்கம் முயன்றாலும், இது மிகவும் சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் என அவர் சாடினார்.

திறைசேரியின் பணம் திருடப்பட்டு மாதக் கணக்காகியும், நாட்டின் நிதி தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய பாராளுமன்றத்திற்கோ அல்லது பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கோ இது குறித்து முறைப்பாடு செய்யப்படாமை பாரிய குற்றச்சாட்டாகும் என சாகர காரியவசம் தெரிவித்தார். (அ)

# இலங்கை மீனவர் ஒருவர் தமிழகத்தில் சிறைப்பிடிப்பு

சென்னை, ஏப். 28

இலங்கை மீனவர் ஒருவர் தமிழகத்தில் மீனவர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் மாவட்டம் செருதூர் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள், கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமான முறையில் அணுகிய வேகப் படகிலிருந்த மூவரில் ஒருவரைப் பிடித்துள்ளனர். மற்ற இருவர் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பிடிக்கப்பட்ட நபர் பின்னர் விசாரணையில் இலங்கையின் காங்கேசன்துறை பகுதியைச் சேர்ந்த மீனவர் என தெரியவந்துள்ளது. அவர் தமிழ்மொழியில் பேசியதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், கடலில் விரிக்கப்பட்ட மீன்பிடி வலையை அறுக்க முயன்றதாக ஏற்பட்ட சந்தேகத்தின் காரணமாக இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் குறித்த இலங்கை மீனவர் காயமடைந்துள்ளார். அவருக்கு வலது கண் புருவம், தலையின் இடப்பக்கம் உள்ளிட்ட பகுதிகளில் காயங்களும், நெற்றியில் வீக்கமும் ஏற்பட்டுள்ளதால், நாகப்பட்டினம் அரசு வைத்தியக் கல்லூரி மருத்துவமனை அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (அ)

# நீரில் மூழ்கி இருவர் பலி!

கொழும்பு, ஏப். 28

நாட்டின் இரு வேறு பகுதிகளில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்த துயரச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன

அதன்படி கிளிநொச்சி - கனகாம்பிகைக் குளத்தில் நீராடிய குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கனகாம்பிகைக் குளத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் மூவர் நீராடிய நிலையில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல்போயிருந்தார்.

அவரை தேடும் பணி நேற்று மாலை முதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்று காலை 8.00 மணியளவில் இரணைமடு நன்னீர் மீனவர்களால் சடலமாக மீட்கப்பட்டார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மஹவ - பலகொல்லாகம பகுதியில் உள்ள தெதுறு ஓயாவில் நேற்று முன் தினம் மாலை நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக மஹவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபர் வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்தபோதே, இடையில் தெதுறு ஓயாவில் நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# மாகாண சபை தேர்தலை நடத்த அரசு எடுக்கும் முடிவுகளுக்கு ஒத்துழைப்பு!

## ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 28

"மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசு எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்" என்று ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்த தற்போதைய நிலைவரம் பற்றி ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"2017 ஆம் ஆண்டு எல்லை நிர்ணய அறிக்கை தோற்கடிக்கப்பட்ட பின்னர், பிரதமரின் தலைமையில் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு உரிய காலத்தில் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தால் மாகாண சபைத் தேர்தலை அன்றே நடத்தியிருக்கலாம்.

குறித்த குழு அறிக்கை சமர்ப்பிக்கத் தவறிய நிலையில், அடுத்தகட்டமாக என்ன செய்ய வேண்டும் என்பது குறித்துச் சட்டத்தில் தெளிவான ஏற்பாடுகள் இல்லை. இதுவே தற்போதைய இழுபறிக்கு முக்கிய காரணமாகும்.

இந்தச் சட்டச் சிக்கல்கள் குறித்து நாடாளுமன்ற விசேட செயற்குழுவில் ஆராயப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெளிவான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கை வெகுவிரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

எல்லை நிர்ணயப் பிரச்னைக்கு முரண்பாடற்ற வகையில் முறையான தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் சிறந்த முறையில் தேர்தலை நடத்த முடியும். தேர்தலை நடத்துவதற்கான ஆக்கபூர்வமான சூழலை உருவாக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக இருக்கின்றது." - என்றார். (அ)

டீசல் இறக்குமதியில் பாரிய ஊழல்

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் கூட்டு எதிர்க்கட்சி முறைப்பாடு!

கொழும்பு, ஏப். 28

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட டீசல் இறக்குமதியின்போது பாரிய ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறி, அந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் பிரதிநிதிகளால் இந்த முறைப்பாடு நேற்று திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த டீசல் இறக்குமதி நடவடிக்கையினால் அரசாங்கத்துக்கு பெருமளவிலான நிதி நட்டம் ஏற்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலிக்குமாறு எதிர்க்கட்சி பிரதிநிதிகள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த கொடுக்கல் வாங்கலில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து கண்டறியப்பட வேண்டும் எனவும், இந்த நட்டத்திற்குப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அந்த முறைப்பாட்டில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# மக்களின் பணத்தை பாதுகாப்பதில் நிர்வாகத் திறமையற்றுள்ளது அரசு!

## ஹர்ஷண ராஜகருணா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 28

"திறைசேரியில் உள்ள மக்களின் வரிப்பணத்தைப் பாதுகாக்க முடியாத அளவுக்குத் தற்போதைய அரசு நிர்வாகத் திறமையற்று இருக்கின்றது. பல மாதங்களாக இந்த நிதி மோசடியை பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்காமல் மறைத்து வைத்திருப்பது ஒரு பாரிய சதியாகும்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசுக்கு நாட்டை வழிநடத்தும் அனுபவம் இல்லை என்பதை நாம் ஏற்கனவே எச்சரித்தோம். ஆனால், வெறுப்புணர்வைப் பரப்பி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த இவர்கள், இப்போது மக்களின் வரிப்பணத்தை நாசமாக்கியுள்ளனர்.

இந்தத் திறைசேரிப் பணம் என்பது பெலவத்தையிலிருந்து (ஜே.வி.பி தலைமையகம்) கொண்டுவரப்பட்டதோ அல்லது அவர்களின் உறுப்பினர்களிடம் வசூலிக்கப்பட்டதோ அல்ல. இது இந்த நாட்டு மக்களின் இரத்தம் கலந்த வரிப்பணம். இதற்கு யார் பொறுப்பேற்பது?

பாராளுமன்றம் என்பது நாட்டின் நிதி தொடர்பான முழுமையான பொறுப்புள்ள நிறுவனமாகும். ஆனால், பல மாதங்களாக இந்த மோசடித் தகவலை அரசு இரகசியமாக வைத்திருந்தது ஏன்? பாராளுமன்றத்துக்கோ அல்லது நிதி தொடர்பான குழுவுக்கோ இது தெரியப்படுத்தப்படவில்லை. ஜனாதிபதிக்கும் இது தெரிந்தே மறைக்கப்பட்டதா?"-என்றார். (அ)

# திறைசேரியின் 2.5 மில்லியன் டொலர் மோசடி; கொழும்பில் திரண்டனர் போராட்டக்காரர்கள்!

கொழும்பு, ஏப். 28

இலங்கை திறைசேரியினால் வெளிநாட்டுக் கடன் தவணையாகச் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, வேறொரு தரப்பினரின் கைக்குச் சென்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று திங்கட்கிழமை கொழும்பில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிதி அமைச்சின் வளாகத்துக்கு முன்பாக சர்வஜன அதிகாரம் அமைப்பினர் நேற்று காலை பாரிய எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். பொதுமக்களின் வரிப்பணம் முறையாகக் கையாளப்படாமை குறித்து இதன்போது கோசங்கள் எழுப்பப்பட்டன.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளும் இந்த நிதி மோசடிக்கு எதிராக நேற்றுக் காலை இலங்கை மத்திய வங்கிக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், அரகலயவின் பிரஜைகள் அமைப்பினால்



ஏற்பாடு செய்யப்பட்ட மற்றுமொரு எதிர்ப்புப் போராட்டமும் நேற்று மத்திய வங்கிக்கு முன்பாக இடம்பெற்றது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org